கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

**OS.No.92/2021**

| | |
|---|---|
| Witness Rank | CW2 |
| Name of the Witness | சத்தியநாராயணன் |
| Father's Name | பார்த்தசாரதி |
| Age | 46 |
| Occupation | மருத்துவர் |
| Address | பாண்டிச்சேரி |

1969-ம் ஆண்டு 14வது சட்டத்தின் படி 12வது பிரிவின் கீழ் 04.03.2026 அன்று செல்வி. பா.பெபேயா, பி.ஏ., எல்.எல்.பி., கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, கடலூர் அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை

**(1)** எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சி கூற அழைப்பானை கிடைக்கப்பெற்றதா என்றால் கிடைக்கப்பெற்றது. இந்த வழக்கில் கூறப்பட்டுள்ள சொத்தான சர்வே எண் 13/1 A ஆனது ஆதியில் எனது பாட்டனாருக்கு சொந்தமானது என்றால் சரிதான். இந்த சொத்து மற்றும் அதற்கு பக்கத்தில் இருக்கும் சுமார் 200 ஏக்கர் சொத்துக்கள் எங்களது பாட்டனாரின் பூர்வீக சொத்து என்றால் சரிதான். அந்த சொத்துக்களில் ஒரு பாகத்தை எனது பாட்டனார் எனது தகப்பனாருக்கு உயில் மூலமாக கொடுத்தார் என்றாலும் அதன் பின் எனது தகப்பனார் எனக்கும் எனது சகோதரருக்கும் அச்சொத்துக்களை செட்டில் மெண்ட் எழுதிவைத்தார் என்றாலும் சரிதான்.

(2) எனக்கு கிடைக்கப்பெற்ற சொத்தின் ஒரு பாகத்தை நான் விற்று விட்டேன் என்றாலும் மீதி எனது அனுபவத்தில் உள்ளது என்றாலும் சரிதான். எனக்கு எனது தகப்பனார் பார்த்தசாரதி தான பத்திரம் எழுதிக் கொடுப்பதற்கு முன்பாக அச்சொத்துக்கள் அனைத்தும் எனது தகப்பனார் அனுபவத்தில் இருந்தது என்றால் சரிதான். எனது தகப்பனாரும் வழக்கறிஞர் தான் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் மற்றும்

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.03.04 19:06:10 +0530

எனக்கு பாத்தியப்பட்ட இதர சொத்துக்களை நாங்கள் குத்தகைக்கு விட்டோம் என்றால் சரியல்ல. சுயமாகத்தான் பயிர் இட்டு வந்தோம்.

(3) வழக்கு சொத்தில் 2012 ல் பயிர் செய்பவர்களுக்கும் எனக்கும் பிரச்சனை ஏற்பட்டு காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் என்றால் சரியல்ல. பயிர் செய்தவர்கள் எனக்கு எதிராக புகார் அளித்தனர் என்றால் சரியல்ல. எனக்கு ராயல் வீராசாமியைத் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்துக்கு அடுத்தால் உள்ள சுமார் 13 ½ ஏக்கர் நிலத்தை ராயல் வீராசாமி கிரையம் பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

(4) அதுபோக சொத்து சம்மந்தமான பிரச்சனைக்கு என்னை காவல் நிலையத்தில் விசாரித்தார்கள் என்றாலும் நான் தற்சமயம் வழக்கிற்காக மாற்றி கூறிகிறேன் என்றாலும் சரியல்ல. அதை தொடர்ந்து வருவாய் வட்டாட்சியரிடமும் விசாரணை இருந்தது என்றால் எனக்கு தெரியாது. வருவாய் வட்டாட்சியரிடம் இருந்து குத்தகைதாரருக்கு குத்தகை ரசீது வழங்க விசாரணை நடந்து என்றால் விசாராணை நடக்கவில்லை.

(5) நான் இந்த சொத்துக்களை புகழேந்தி மூலம் ஞானசேகருக்கு விற்பனை செய்தேன் என்றால் சரிதான். நான் புகழேந்திக்கு 2011 ல் பவர் கொடுத்தேன் என்றால் சரிதான். நிலத்தில் ஏற்பட்ட தகராறுகள் காரணமாகத்தான் புகழேந்திக்கு பவர் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be correct.*

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.03.04 19:06:15 +0530

***Additional District Munsif ,***
***Cuddalore.***

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

**O.S.No.92/2021** தேதி**: 04.03.2026**

நீதிமன்ற சாட்சி -2 (சத்தியநாராயணன், த/பெ.பார்த்தசாரதி) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**6 -** பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

(6) ராயல் வீராசாமியை எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தினை நான் யாருக்காவது குத்தகைக்கோ அல்லது பவர் கொடுத்துள்ளேனா என்றால் புகழேந்தி என்பவருக்கு வழக்கு சொத்தினை விற்பனை செய்ய பவர் மட்டும் தான் கொடுத்துள்ளேன். வழக்கு சொத்தினை பொறுத்து புகழேந்தி ராயல் வீராசாமிக்கு பவர் ஏதேனும் கொடுத்துள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. புகழேந்தியிடம் அதைப்பற்றி ஏதேனும் கேட்டேனா என்றால் இல்லை.

(7) புகழேந்தி என்பவர் ராயல் வீராசாமிக்கு பவர் கொடுத்ததால் தான் வாதிகள் ராயல் வீராசாமியை இவ்வழக்கில் பிரதிவாதியாக சேர்த்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. புகழேந்திக்கு பவர் கொடுத்த பின்பும் வழக்கு சொத்தினை நாங்கள் தான் பயிர் வைத்து வந்தோம். எனது அப்பா அவரது காலத்தில் வழக்கு சொத்தினை குத்தகைக்கு கொடுத்தாரா என்றால் இல்லை.

(8) வழக்கு சொத்தினை நாங்கள் ஏற்கனவே விற்பனை செய்துவிட்டோம் என்றால் சரிதான். ராயல் வீராசாமி எனது நிலத்தின் பிரதிநிதியாக்கத்தான் வருவாய் அலுவலக விசாரணைக்கு சென்றார் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு ராயல் வீராசாமி விசாரணையில் கலந்து கொண்ட விவரங்கள் அனைத்தும்

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.03.04 19:06:20 +0530

தெரிந்தும் தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பா காலத்தில் இருந்து நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

ஆவணங்கள் ஏதும் தாக்கல் இல்லை.

குறுக்கு விசாரணை முற்றிற்று.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be correct.*

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.03.04 19:06:23 +0530

***Additional District Munsif , Cuddalore.***